# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்

## 08.05.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் பண்புப் பெயர்களுள் ஒரு பெயர் **அல்வாஸிஃ** என்பதாகும். இதன் பொருள்: அல்லாஹ்வின் ரிஸ்க் அவனது எல்லா படைப்பினங்களையும் சூழ்ந்துள்ளது. அவனது கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. அவனது இருப்பு எல்லா தேவையையும் சூழ்ந்துள்ளது என்பதாகும். இதற்கு இன்னொரு பொருள் மிக அதிகமாக வாரி வழங்குபவன்; வேண்டுகின்ற போது மிகவும் விசாலமாக இருப்பவன் என்பதாகும். இதற்கு இன்னொரு பொருள் உள்ளது. அதாவது அனைத்தையும் சூழ்ந்துள்ளவன்; அனைத்தையும் நன்கு அறிந்தவன். இறைவனது இந்த பண்பிற்கு திருக்குர்ஆனில் இவ்வனைத்துப் பொருளும் காணப்படுகிறது.

இப்போது நான் திருக்குர்ஆனின் சில வசனங்களை எடுத்துரைக்கிறேன். இதில் இறைவன் சில விஷயங்களின் பக்கம் மூஃமின்களுக்கு கவனமூட்டியவாறு தனது **வாஸிஃ** என்ற பண்போடு தொடர்புபடுத்தியுள்ளான்.

அல்லாஹ் சூரா பக்கரா 269 –வது வசனத்தில் ஷய்த்தான் மனிதனை வழிகெடுப்பது தொடர்பாக கூறுகின்றான்.

**அஷ்ஷய்த்தானு யஇதுகுமுல்ஃபக்ர வயஃமுருக்கும் பில்ஃபஹ்சாயி வல்லாஹு யஇதுகும் மக்ஃபிரத்தம் மின்ஹு வஃபழ்ளா. வல்லாஹு வாஸிவுன் அலீம்** – ஷய்த்தான் உங்களை வறுமைக்கு அஞ்சுமாறும், வெட்கக்கேடானதை உங்களுக்குத் தூண்டவும் செய்கிறான். அல்லாஹ்வோ தன்னிடமிருந்து ஒரு பெரும் மன்னிப்பையும், பேரருளையும் வாக்களிக்கின்றான். அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், நன்கு அறிபவனுமாவான். (2:269)

இந்த வசனத்தில் அல்லாஹ் இரண்டு விஷயங்களை விளக்கியுள்ளான். இவை ஷய்த்தான் அல்லாஹ்விடமிருந்து மனிதனை விலக்குவதற்காக பயன்படுத்துகின்ற வழிகள் ஆகும். ஒன்று **ஃபக்ர்** – அதாவது இரண்டாவது வெட்கக்கேடான செயல்களைச் செய்ய கட்டளை இடுதல்.

ஏழ்மைக்கு அச்சுறுத்துவதும் பல வகைப்படுகிறது. ஷய்த்தான் இறைவனிடம் நான் எல்லா பாதைகளிலும் அமர்ந்து கொண்டு மனிதனை வழிகெடுப்பேன் என்று கூறினான். அவன் கூறியதை நிறைவேற்றுவதற்காக எல்லா வழியிலும் அவன் முயற்சி செய்கிறான். அவன் மனிதனின் எல்லா பாதைகளிலும் சென்று உட்கார்ந்து கொள்வது தனது சக்தியால் அல்ல. மாறாக இறைவன் அவனுக்கு அனுமதி வழங்கியுள்ளான். சரி! நீ செய்ய விரும்புவதை செய்து கொள். ஆனால் உன்னைப் பின்பற்றுபவர்களால் நரகத்தை நிரப்பி விடுவேன் என்று அல்லாஹ் ஷய்த்தானிடம் கூறி விட்டான். இதை இறைவன் திருக்குர்ஆனில் மிகத் தெளிவாக நமக்கு கூறியுள்ளான். நீங்கள் எனது அடியார்களாக இருக்க விரும்பினால் ஷய்த்தானிடமிருந்து விலகி இருங்கள். வெளிப்படையாக பார்க்கும் போது ஷய்த்தான் காட்டுகிற வழி மிக நல்ல வழியாக தெரியும். ஆனால் இதன் விளைவு உங்களுக்கு நன்றாக இருக்காது என்று கூறி இறைவன் நம்மை உஷார் படுத்தினான்.

இது தொடர்பாக இறைவன் பல்வேறு ரீதியில் ஷய்த்தானிடமிருந்து விலகியிருக்க நமக்கு வலியுறுத்தியுள்ளான். அதன் தீமையை நமக்கு எடுத்துரைத்துள்ளான். ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

**வயுரீதுஷ்ஷய்த்தானு அய்யுல்லஹும் ழலாலம் பயீதா.**

இன்னும் ஷய்த்தான் உங்களை மிக தீய இழப்பிற்கு ஆளாக்கி விடுவான். அவன் உங்கள் நண்பனாக இருந்து உங்களுக்கு இழப்பை ஏற்படுத்துவான்.

**இன்னோர் இடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:**

**இன்னஷ் ஷய்த்தான லகுமா அதுவ்வும் முபீன்** – நிச்சயமாக ஷய்த்தான் உங்கள் இருவருக்கும் மிக வெளிப்படையான எதிரி ஆவான்.

ஆதம், ஏவாள் தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான் என்றாலும் இது ஆதம் மற்றும் ஏவாளோடு முடிந்து விடும் விஷயம் அல்ல. மாறாக இங்கு ஆண்களையும் பெண்களையும் விழிப்பூட்டப்பட்டுள்ளது. ஷய்த்தான் உங்கள் இருவருக்கும் மிகவும் வெளிப்படையான எதிரி ஆவான். எனவே அவனிடம் ஏமாறுவதிலிருந்து விழிப்போடு இருங்கள். நல்ல செயல்களை செய்யுங்கள். இறைவணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள சம்பவங்களும் கதைகளும் எவரும் பழைய கதைகள் அல்ல. மாறாக இது வருங்காலத்தைப் பற்றிய முன்னறிவிப்புகள் ஆகும். எனவே நீங்கள் உண்மையிலேயே ஈமான் கொண்டவர்கள் என்றால் இவைகளில் மிகவும் விழிப்போடு இருங்கள். இந்த சம்பவங்கள் இப்போதும் நிகழக்கூடும்.

காலம் மாறிவருதோடு ஷய்த்தானின் தூண்டுதலின் வழியும் மாறி வருகிறது. ஒவ்வொரு கண்டுபிடிப்பின் போதும் மனிதனின் பாதங்கள் முன்னேறி வருகிறது. இது தனது அழகைக் கொண்டு எங்கு நமக்கு பலன் தருகிறதோ அங்கு ஷய்த்தானும் அதை பயன்படுத்துகிறான். நீங்கள் ஷய்த்தானை பின்தொடர்ந்தால் அழிவின் ஆழ்குழியில் விழுந்து கொண்டே செல்வீர்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.

நான் சூரா பக்கராவிலிருந்து வாசித்த வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். ஷய்த்தான் உங்களை ஏழ்மையைக் காட்டி அச்சுறுத்துகிறான். ஃபகர் என்றால் ஏழ்மை என்றும் பொருள். அவ்வாறே ஃபகர் என்றால் முதுகெலும்பு உடைவது என்றும் பொருள் உண்டு.

நீங்கள் இந்த தியாகங்களைச் செய்தால் பிறகு எழுந்து நிற்கக்கூட முடியாமல் ஆகி விடுவீர்கள்; இந்த வேலையைச் செய்தால் ஏழ்மை உங்களை வந்து சூழ்ந்து கொள்ளும்; மிகவும் முன்னேறி வருகின்ற இந்த உலகில் மிகவும் பின்தங்கி விடுவீர்கள்; ஒருபோதும் உங்களுக்கென்று ஒரு நிலையை உங்களால் உருவாக்கிக் கொள்ள முடியாது என்று கூறி ஷய்த்தான் அச்சுறுத்துகிறான்.

பிறகு ஷய்த்தான், இந்த நேரம் வேலை செய்ய வேண்டிய நேரமாகும்; இதை இறைவணக்கத்திற்காக தியாகம் செய்யக் கூடாது என்றும், பொருள் தியாகம் செய்யும் போதும் ஏழ்மையைக் காட்டியும், இப்போது வேலை செய்யாவிட்டால், பைசா செலவாகி விட்டால் பிறகு வியாபாரம் நஷ்டமடைந்து விடும் என்றும், இந்த தொகையை இன்று (மார்க்கத்திற்காக) செலவு செய்து விட்டால் குழந்தைகள் பட்டினியாகி விடுவார்கள் என்றும் ஷய்த்தான் அச்சுறுத்துகிறான். ஆனால் அல்லாஹ்வின் நல்லடியார்கள் இந்த அச்சுறுத்தலையெல்லாம் பொருட்படுத்துவதில்லை.

அல் ஃபஸ்ல் பத்திரிகையை நான் சில நாட்களுக்கு முன் பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் பொருள் தியாகத்தைப் பற்றி கட்டுரை எழுதியவர் ரப்வாவில் ஒரு அஹ்மதியின் சம்பவத்தை எழுதியிருந்தார். அதாவது ஒருவர் இறைச்சிக் கடை முன் நின்று இறைச்சி வாங்கிக் கொண்டிருந்தார். அப்போது பொருளாளர் அந்த வழியாக சைக்கிளில் வந்தார். இறைச்சி வாங்கிக் கொண்டிருந்தவரைப் பார்த்து பொருளார் சாஹிப் உங்களுக்கு இந்த சந்தாவில் பாக்கி உள்ளது என்று நினைவூட்டுவதற்காக கூறினார். அதற்கு அவர் எவ்வளவு பாக்கி உள்ளது என்று கேட்டார். இவ்வளவு பாக்கி உள்ளது என்று பொருளாளர் கூறியதும் அவர் கையில் வைத்திருந்த

தொகையை கொடுத்து ரசீது பெற்றுக் கொண்டார். பிறகு தான் வாங்கிய இறைச்சியை கடைக்காரரிடம் இன்று நாங்கள் இறைச்சி சாப்பிட முடியாது. சாதா உணவு சாப்பிட்டுக் கொள்கிறோம் என்று திருப்பிக் கொடுத்து விட்டார்.

ஆக இவர்கள்தான் ஷய்த்தானின் ஏமாற்றுதலுக்கு ஆளாகாமல் தப்பித்துக் கொள்கிறார்கள். அந்த ஷய்த்தான் அவர்களிடம் நீ என்ன செய்கிறாய்? உனது குழந்தைகள் இறைச்சி சாப்பிட வேண்டும் என்ற ஆசையோடு இருக்கிறார்கள். அவர்களுடைய ஆசையை நீ புறக்கணிக்கின்றாய் என்று கூறுவான். (ஆனால் அவர்கள் அதை பொருட்படுத்துவதில்லை.)

இவ்வாறு ஒன்றல்ல; இரண்டல்ல. நூற்றுக்கணக்கான உதாரணங்கள் உள்ளன. இந்த மக்கள் வெறும் இறைச்சியை மட்டும் விட்டுக் கொடுப்பவர்கள் அல்ல. மாறாக பொருள் தியாகம் செய்வதற்காக பட்டினிகூட கிடப்பார்கள். பொருள் தியாகம் செய்வதிலிருந்து ஒருபோதும் பின்வாங்க மாட்டார்கள்.

உயிர் தியாகம் செய்பவர்களும் உள்ளனர். ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் வரலாறு இவ்வகை மக்களால் நிரம்பி காணப்படுகிறது. பாகிஸ்தானில் நூற்றுக்கணக்கான மரணம் நிகழ்கிறது. பொதுவாகவும் மக்கள் இருக்கின்றனர். யார் எப்போது தோட்டாவிற்கு இலக்கு ஆவார்கள் என்று யாருக்குமே தெரியாது. ஆனாலும் இந்த வேலையை செய்வதால், இந்த இடத்தில் வசிப்பதால் அல்லது இந்த வழியாக செல்வதால் எப்போது வேண்டுமானாலும் மரணம் நிகழும் என்று ஒரு அஹ்மதிக்குதான் அதிகமாகத் தெரியும். ஆனால் இறைவனுக்காக இவர்கள் தியாகங்கள் செய்து கொண்டே இருக்கிறார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் ஹஸ்ரத் அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீத் அவர்கள் உயிரை தியாகம் செய்துள்ளார்கள். மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் காபூலில் நிகழ்ந்தது. இந்த தியாகங்கள் எல்லாம் உலகிற்கு இந்த வகையான அப்துர் ரஹ்மான்கள் ஒரு குறிக்கோளுக்காக இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக உயிரை தியாகம் செய்வதற்கும் அஞ்சுவதில்லை. இவ்வகையான பல தியாகங்களுக்கும் பல உதாரணங்கள் அஹ்மதிகளின் வாழ்வில் உள்ளன. திடீரென்று நிகழ்த்தப்பட்ட தாக்குதலினால் இவர்கள் தங்கள் உயிரை தியாகம் செய்யவில்லை. மாறாக, நெஞ்சை நிமிர்த்தியவாறு இவர்கள் தமது மார்க்கத்தில் உறுதியாக நிலைநின்றவாறு தியாகங்கள் செய்துள்ளனர். தங்கள் உயிர்களை அர்ப்பணம் செய்துள்ளார்கள்.

ஷயத்தானைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான். இவன் தியாகம் செய்கின்ற போது உங்களை அச்சுறுத்துகிறான். ஏழையாகி விடுவீர்கள் என்று கூறியும், உனது தியாகத்தால் உனது சந்ததிகள் வீணாகி விடுவார்கள் என்று கூறியும், உயிர் தியாகம் செய்து விட்டால் சந்ததிகளின் நிலை என்னவாகும்? என்று கூறியும் அச்சுறுத்துகிறான்.

இன்றைய உலகில் வாழ்விற்கான வருமானத்திற்கும் முதுகெலும்பு என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. உயிர், செல்வம் மற்றும் நேரத்தை தியாகம் செய்பவர்களுக்கு அவர்களின் செல்வம் அழிந்து விடும் என்று அச்சுறுத்தப்படுகிறது. ஆனால் இவர்கள் தியாகங்கள் செய்து கொண்டே செல்கிறார்கள். ஷய்த்தானின் ஏமாற்றுதலுக்கு ஆளாவதில்லை. இவ்வாறு மனித வாழ்வில் இன்னும் பல தியாகங்கள் உள்ளன. அதிலிருந்து ஷய்த்தான் அச்சுறுத்துகிறான்.

நேரத்தை தியாகம் செய்யும் பல உதாரணங்கள் காணப்படுகிறது. இதை எல்லா அஹ்மதிகளும் நன்கு அறிவர். ஏனென்றால் ஜமாஅத் அமைப்போடு இணைந்துள்ள அஹ்மதிகள் யாவரும் ஜமாஅத்திற்காக ஏதாவதொரு வகையில் நேரத்தை ஒதுக்குகிறார்கள். ஜமாஅத் கூட்டங்களிலும், ஜல்ஸா மற்றும் பிற கூட்டங்களுக்காகவாவது ஓரளவு நேரத்தை செலவிடுகிறார்கள். பெரும்பாலான எண்ணிக்கையில் அஹ்மதிகள் தங்களது நேரத்தை ஜுமுஆ தொழுகைக்காக செலவு செய்கிறார்கள். இவர்கள் ஷய்த்தான் ஏற்படுத்துகின்ற ஊசலாட்டத்தையும் பொருட்படுத்துவதில்லை. ஆனால் சிலர் ஜுமுஆவிற்கு மட்டுமல்ல. பெருநாள் தொழுகைக்குக்கூட வருவதில்லை. இவர்கள் தங்களது வியாபாரத்திற்காக இறை வணக்கத்தை தியாகம் செய்பவர்கள் ஆவர். இவர்களின் தொழுகையும் மிகவும் கவலைக்குரிய நிலையாகும். அஹ்மதிகளிலும் கூட இதன் பக்கம் எந்த அளவு கவனம் செலுத்த வேண்டுமோ அந்த அளவு கவனம் செலுத்துவதில்லை.

இறைவணக்கத்தில் இவர்கள் காட்டுகின்ற சோம்பேறித்தனத்திற்கு பல காரணங்கள் உள்ளன. அதில் மிகப்பெரிய காரணம் இவர்கள் தமது வியாபாரத்திலும் பணியிலும் மூழ்கிவிடுவதே ஆகும். பணிகளுக்கு மத்தியில் தொழுகைக்காக நேரத்தை தியாகம் செய்வதில்லை.

ஷய்த்தான் பல வழிகளில் நீங்கள் தியாகம் செய்கின்றபோது உங்களை அச்சுறுத்துகின்றான் என்று அல்லாஹ் கூறுகிறான். ஏழ்மையைக் காட்டி தொழுகைக்காக நேரத்தை ஒதுக்குவதிலிருந்து தடுக்கின்றான். இன்னும் பல வழிகளில் தியாகம் செய்வதிலிருந்து தடுக்கின்றான். ஒரு மூஃமின் என்ற அடிப்படையில் நீங்கள் சுதாரிப்பாக இருங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ்விடமிருந்து விலக்குவதற்கு ஷய்த்தான் பல வழிமுறைகளை பயன்படுத்துகிறான்.

ஒருபுறம் ஏழ்மைக்கு அச்சுறுத்தி தியாகம் செய்வதிலிருந்து உங்களை ஷய்த்தான் தடுக்கின்றான். மறுபுறம் வெட்கக்கேடான செயல்களைச் செய்யத் தூண்டி நேரத்தையும் செல்வத்தையும் செலவு செய்ய வைத்து விடுகிறான். உலகவாதிகள் ஷய்த்தானின் ஏமாற்றுதலுக்கு ஆளாகி வீணானவற்றிற்காக செலவு செய்கிறார்கள். ஒரு மூஃமின் அல்லாத ஒருவரை ஒரு பௌதீகவாதியை ஷய்த்தான் உலக கேளிக்கைக்காக செலவு செய்ய வைத்து விடுகிறான். சூதாட்டம், மது போன்ற வீணானவற்றிற்காக ஷய்த்தானின் பின்னால் செல்பவர்கள் மிக அதிகமாக செலவு செய்கின்றனர். அவர்கள் அதை உணர்வதில்லை. ஏனென்றால் ஷய்த்தான் தற்காலிகமான சுகபோகத்தை நம்ப வைத்து விடுகிறான். தான் தவறான செயலைச் செய்து கொண்டிருப்பதையும் மனிதன் மறந்து விடுகிறான். ஷய்த்தானை பின்பற்ற ஆரம்பித்து விடுகிறான். மூஃமின்களுக்கு அல்லாஹ் கூறுகிறான்.

**லா தத்தபிஊ குதுவாதிஷ் ஷய்த்தான்** – ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். (2:169)

உங்களை இறைவனிடமிருந்து முற்றிலும் விலக்கி விடவே ஷய்த்தான் விரும்புகிறான். அவனிடம் நன்மையை ஒருபோதும் எதிர்பார்க்காதீர்கள். ஷய்த்தானிடமிருந்து நன்மை கிடைக்கும் என்று எண்ணுவது கூட முட்டாள்தனமாகும். அவனுடைய பணி வெட்கக் கேட்டையும், விரும்பத்தகாததையும் ஏவி மனிதனை வழிகெடுப்பதாகும். நாம் ஒரு பௌதீகவாதியிடம் ஷய்த்தானைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? என்று நாம் கேட்டால் அல்லாஹ் என்னை அவனை விட்டு காப்பாற்றுவானாக! என்று தான் கூறுவார். ஆனால் தியாகங்களை விட்டு விலகி வெட்கக்கேட்டை நெருங்கி ஷய்த்தானை பௌதீகவாதி பின்பற்றுகிறார். தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று கூட அவர்களுக்கு தெரிவதில்லை. ஷய்த்தான் தனது மக்களை வெட்கக்கேட்டின் பக்கம் அழைத்துச் சென்று நான் பெரும்பாலான மனிதர்களை அல்லாஹ்வை விட்டு விலக்கி விடுவேன் என்று தான் கூறியதை நிறைவேற்றுகின்றான். ஷய்த்தானின் இந்த சூழ்ச்சியால் நீங்கள் சுதாகரிப்பாக இருங்கள். அவர் மிகவும் சூழ்ச்சி செய்தவாறு தன் பக்கம் உங்களை அழைக்கிறான். இறைவனின் பக்கம் வாருங்கள். இதுவே உங்கள் வாழ்வின் குறிக்கோளாகும் என்று அல்லாஹ் கூறுகிறான். அவன் பக்கம் நெருங்குவதற்கு அவனிடம் தவ்பா செய்தவாறு குனியுங்கள். அல்லாஹ் உங்களிடம் பாவமன்னிப்பு வழங்குவதாக வாக்குறுதி வழங்குகிறான். உங்கள் முந்தைய பாவங்களை அவன் மன்னிப்பான். வருங்காலத்திலும் உங்களுக்கு நன்மை செய்வதற்கான வாய்ப்பை வழங்கி உங்கள் மீது அருள் புரிவான்.

இங்கு யஇதுகும் என்ற சொல்லை பயன்படுத்தி அல்லாஹ் கூறுகிறான். நீங்கள் உண்மையான தவ்பா செய்தால் உங்களுக்கு பாவங்கள் மன்னிக்கப்படுவதோடு அவனுடைய அருளின் வாசல்கள் உங்கள் மீது திறக்கப்படும். அது மனிதன் சற்றும் எதிர்பாராத இடத்திலிருந்து கிடைக்கும். இந்த வசனத்தில் அல்லாஹ் ஷய்த்தானின் முதல் செயலைக் குறிப்பிடுகின்றான். அதாவது ஏழ்மைக்கு அச்சுறுத்துவது; தியாகங்கள் செய்தால் ஏழ்மை வந்து விடும். வெறும் ஏழ்மை மட்டுமல்ல. எவ்வாறு முதுகெலும்பு இல்லாமல் மனிதனால் எழுந்துகூட நிற்க முடியாதோ அவ்வாறே இந்த தியாகத்தை நீ செய்தால் பிறகு எழுந்து நிற்கக்கூட தகுதியற்றவனாகி விடுவாய் என்று கூறி மனிதனை ஷய்த்தான் அச்சுறுத்துகிறான். ஆனால் ஷய்த்தான் பொய் சொல்கிறான் என்று அல்லாஹ் கூறுகிறான். கியாமத் நாளன்று ஷய்த்தான் இதையெல்லாம் மறுத்து விடுவான். ஆனால்

அல்லாஹ் உங்களிடம் வாக்குறுதி வழங்குகிறான். அவன் உங்களுக்கு மன்னிப்பிற்கான ஏற்பாட்டை செய்வான். அதன் விளைவாக அல்லாஹ் இவ்வுலகிலும் தனது அருளை இறக்குவான். மறு உலகிலும் அல்லாஹ் மனிதனை தனது மன்னிப்பு என்ற போர்வையில் மூடிக்கொள்வான்.

பிறகு ஷய்த்தான் வெட்கக்கேடான செயல்களை செய்வதற்கு கட்டளையிடுகிறான். இந்த செயல்களைச் செய்வதால் மனிதன் இவ்வுலகிலும் நஷ்டத்தை அவன் சந்திக்க வேண்டி வருகிறது. இந்த இழப்பு இவ்வுலகிலும் கிடைக்கிறது. மறுவுலகில் இது தண்டனையின் வடிவில் கிடைக்கும். ஆனால் ஒரு மூஃமினின் மீது இறைவன் தனது அருளைப் பொழிந்து கொண்டேயிருப்பான் என்று வாக்குறுதி வழங்கியுள்ளான். அவனது அருட்கொடையின் வாசல்கள் திறந்து கொண்டே செல்லும். இவ்வுலகிலும் மறுவுலகிலும் இறைவனின் நெருக்கத்தைப் பெற்றவாறு மனிதனின் பதவி உயர்வதற்கு இது காரணமாக அமையும்.

இந்த வாக்குறுதி வானங்கள் மற்றும் பூமியைப் படைத்த இறைவனின் வாக்குறுதி ஆகும். அவன் வாஸிஃ ஆவான். அவனிடம் என்றும் முடிவடையாத அருட்களின் கருவூலம் உள்ளது. இன்று ஏதாவதொரு தியாகத்தை செய்கின்ற அஹ்மதி, அல்லாஹ் ஒவ்வொரு தியாகத்திற்காகவும் எண்ணிக்கூட பார்க்க முடியாத அளவிற்கு பலனை வழங்குகின்றான் என்பதை நன்கு அறிவர். அல்லாஹ் பல்வேறு வழிகளில் உதவி செய்கிறான். பொருள் தியாகம் செய்பவர்களின் செல்வத்தில் சற்றும் எதிர்பார்க்காத அளவில் அபிவிருத்தியை ஏற்படுத்துகிறான். அவர்கள் கடிதத்தின் மூலம் இதை வெளிப்படுத்தகிறார்கள். அவர்கள் சற்றும் கற்பனை கூட செய்து பார்க்காத அளவில் அவர்களின் ரிஸ்கை அல்லாஹ் அதிகமாக்குகிறான்.

உயிர் தியாகம் செய்பவர்களின் உயிரிலும், பொருளிலும் அவர்களது சந்ததிகள் நினைத்துக்கூட பார்க்காத அளவிற்கு அவர்களுக்கு வாரி வழங்குகிறான். இதற்கு இந்த மக்கள் சாட்சி ஆவார்கள். இந்த ஷஹாதத்துகள் அல்லாஹ்வின் குறிப்பான அருளால் எல்லையில்லாத அருளுக்கு காரணமாகி விட்டது. அவர்கள் அல்லாஹ்வின் அருளில் எல்லையில்லாத அருளைப் பார்த்தார்கள். அந்த இறைவன் வாஸிஃ ஆவான். அலீம் ஆவான். இங்கு அலீம் என்று கூறி உங்களது செயல்களெல்லாம் அவனுக்கு நன்றாக தெரியும். நீங்கள் செய்கின்ற தியாகங்களையும் அவன் நன்கு அறிவான் என்று கவனமூட்டியுள்ளான். நீங்கள் இனிவரும் காலங்களில் செய்யவிருக்கும் தியாகங்களுக்கும் தனது மிக விரிவான அருளைக் கொண்டு உங்களுக்கு அதிகமாக வழங்குவான். இது அடிப்படை விஷயமாகும். இதை எப்போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் தனது அடியார்களின் மீது எவ்வாறு அதிகமாக அருளை இறக்குகிறான் என்று பாருங்கள். மனிதனின் தவ்பா, இஸ்திக்ஃபார், நற்செயல்கள், தியாகங்கள் செய்தல் இது மட்டுமே அவனது அருளைக் கொண்டு வருவதில்லை. மாறாக, அல்லாஹ் தன் எல்லையில்லாத அருளால் தனது வானவர்களையும் இந்த வேலையில் ஈடுபடுத்தியுள்ளான். ஈமான் கொண்டு பாவமன்னிப்பு வேண்டி அல்லாஹ்வின் பாதையில் வழிநடக்க முயற்சி செய்பவர்கள், அவனுக்காக தியாகம் செய்பவர்களுக்காக பாவமன்னிப்பு வேண்டுகிறார்கள்.

**அல்லாஹ் சூரா மூஃமினில் கூறுகின்றான்:**

**அல்லதீன யஹ்மலூனல் அர்ஷ மன் ஹவ்லஹூ யுஸப்பிஹூன பிஹம்தி ரப்பிஹிம் வ ..........**

இங்கு அர்ஷை சுமந்திருப்பவர்கள் என்று கூறுவது வானவர்களை ஆகும். சூரத்துல் ஹாக்காவில் கியாமத் நாளன்று எட்டு மலக்குகள் அர்ஷை சுமந்து கொண்டிருப்பார்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். இங்கு அர்ஷை சுமந்திருப்பவர்கள் என்று மலக்குகளை அல்லாஹ் குறிப்பிடுகிறான். அல்லது இந்த மலக்குகளுக்கு இடப்பட்ட கட்டளைகள் உள்ள பண்புகள் ஆகும். இறைவனின் இந்த பண்புகள் சூரா ஃபாத்திஹாவில் விளக்கப்பட்டுள்ளன. அதாவது அவன் ரப், ரஹ்மான், ரஹீம், மாலிக்கி யவ்மித்தீன் ஆவான். இந்த பண்புகள் இவ்வுலகில் மனிதனுக்கு பலன் தருகின்றன. இவை இறைவனின் அடிப்படைப் பண்புகள் ஆகும். ஈமான் கொண்டவர்கள் தாங்கள் கொண்ட ஈமானுக்குப் பிறகு பாவமன்னிப்பு கோரியவாறு இறைவன் முன்

குனிகின்றார்கள். அவர்கள் நற்செயல்களும் செய்கின்றார்கள். அவர்களுக்காக மலக்குகள் மூலம் இறைவன் தனது பண்புகளை மனிதன் மீது செயல்படுத்துகிறான்.

ஒவ்வொரு மலக்குகளுக்கும சம்பந்தப்பட்ட பண்புப் பெயர்கள் உள்ளன. அவர்கள் இறைவனிடம் அந்த பண்பைக் கொண்டு துஆ செய்கின்றார். இவ்வகை மக்களுக்காக பாவமன்னிப்பு வேண்டுகிறார். இம்மக்கள் ஈமான் கொண்ட பிறகு இறைவனின் நெருக்கம் கிடைப்பதற்கு முயற்சி செய்து வருகின்றார். எப்போதும் தவ்பா செய்தவாறு இந்த நெருக்கத்தை அவர்கள் பெற்றுக் கொண்டே செல்கின்றனர். ஷய்த்தானின் தீய தாக்குதல்களிலிருந்து தப்பித்திருக்கிறார்கள்.

மலக்குகள் என்ற இறை படைப்பில் சில மலக்குகள் இன்னும் சில மலக்குகளின் கீழ் செயல்படுகின்றனர். பண்புகளை சுமந்து கொண்டிருக்கின்ற அவர்களுக்கு கீழ் வேலை செய்கின்ற மலக்குகளும் இறை நல்லடியார்களுக்காக பாவமன்னிப்பு வேண்டுவர்.

ஆக, இறைவன் தன் நல்லடியார்களுக்கு அதிகமாக நற்கூலி வழங்க வேண்டும் என்பதற்காக தனது மலக்குகளை ஈடுபடுத்தியுள்ளான். நீங்கள் எனது இந்த அடியார்களுக்காக பாவமன்னிப்பு வேண்டுங்கள். இதனால் எங்கு இவர்களுக்கு நற்கூலி கிடைத்துக் கொண்டிருக்குமோ அங்கு இவர்களுக்கு எப்போதும் நற்செயல் செய்வதற்கு நல்வாய்ப்பும் கிடைத்துக் கொண்டிருக்கும்.

அடியார் தவறுகள் மற்றும் பிழைகளால் நிரம்பியுள்ளார். சில நேரம் தற்காலிகமாக சில தடுமாற்றங்கள் நிகழ்ந்து விட்டால் தெரியாமல் சில தவறுகள் நிகழ்ந்து விடுகிறது. தெரிந்து கொண்டே தவறிழைத்துக் கொண்டிருக்கக் கூடாது. அவ்வாறு இருக்கும் போது இந்த மலக்குகள் அல்லாஹ்வின் கருணையைத் தூண்டியவாறும் அவனது அறிவைத் தூண்டியும் இம்மக்களை நீ மன்னித்து விடுவாயாக. இனிவரும் காலங்களிலும் உனது வழியில் நடந்தவாறு உனது மன்னிப்பபை இவர்கள் பெற வேண்டும் என்று துஆ செய்கிறார்கள். இங்கு கருணையைப் பற்றி முதலில் கூறி பாவமன்னிப்பு வேண்டப்பட்டுள்ளது. பாவமன்னிப்பு உனது கருணையால் தான் கிடைக்கிறது. எனவே, உனது எல்லையில்லா கருணையை பொங்கச் செய்து எங்களை மன்னிப்பாயாக. உனது ஞானம் ஐயமின்றி மிகவும் பரந்தது. மனிதனின் உள்ளத்தில் உள்ளதையும் நீ நன்கறிகிறாய். இன்று நாங்கள் செய்கின்ற நற்செயல்களுக்குப் பின் நாங்கள் இனி செய்யவிருக்கின்ற செயல்களையும் நீ நன்கறிகிறாய். உனது ஞானம் அனைத்தையும் சூழ்ந்துள்ளது. உனது அறிவின் அடிப்படையில் நாங்கள் இனி வழி தவறலாம். அல்லது நரகத்தின் எரிபொருள் ஆகலாம். ஆனால், உனது கருணையை விரிவுபடுத்தியவாறு எங்கள் நற்செயல்களை நிரந்தரமாக்குவாயாக. எப்போதும் நன்மையின் பக்கம் சாய்ந்தவாறு இருக்க வேண்டும். நரகத்தின் நெருப்பிலிருந்து தப்பித்து இருக்க வேண்டும். உனது கருணை இருந்தால் எங்களுக்கு இதன் நற்பாக்கியம் கிடைக்கும்.

ஆக, இவனே நமது ரஹ்மான். கஃபூருர் ரஹீமாகிய இறைவன். அவன் மனிதனை மன்னிப்பதற்காகவும், நன்மையில் நிலைநிற்க வைப்பதற்காகவும் எல்லா வழிமுறையையும் பயன்படுத்துகிறான். ஒரு பாவம் செய்தால் அதற்கு அதே அளவு தண்டனை கிடைக்கிறது. ஆனால், நன்மை செய்தால் அதற்கு பத்து மடங்கு அதிக நற்கூலியை வழங்குகிறான். தியாகம் செய்தால் அதற்கு 700 மடங்கு அதிக நற்கூலி தருவதாக கூறுகிறான். அதற்கு அதிகமாகவும் தருவான். ஏனென்றால் அவன் வாஸிஃ இறைவனாவான். அவனது நற்கூலிக்கு எல்லையே இல்லை. ஆனால் மனிதன் எவ்வளவு நன்றி கெட்டவனாக இருக்கிறான்!

ரஹ்மான், ரஹீமாகிய இறைவனை விட்டு அவனது எல்லையில்லாத நற்கூலியை விட்டு விட்டு ஷய்த்தானின் ஏமாற்றுதலுக்கு ஆளாகி தற்காலிக சுகபோகங்களின் பக்கம் பாய்ந்து ஓடுகிறார்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் ஒரு துஆவின் விளைவாக அல்லாஹ் தனது கருணையைக் குறித்து சூரா அஃராஃபில் கூறுகிறான்:

நீ எங்களுக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் நன்மையினை எழுதுவாயாக. நாங்கள் உன்னிடமே வந்து விட்டோம். (இதற்கு அல்லாஹ்) தண்டனையை நான் விரும்பியவருக்கு (அதாவது தண்டனைக்குரியவருக்கு)க் கொடுக்கிறேன். ஆனால் என் கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. எனவே இறையச்சத்தை மேற்கொண்டு ஸக்காத் கொடுப்பவருக்கு மேலும் நம் வசனங்கள் மீது நம்பிக்கை கொள்வோருக்கும் நான் அதனை கட்டாயம் எழுதுவேன் எனக் கூறினான். (7:157)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள நபிமார்களின் சம்பவங்கள் வருங்காலத்திற்கு முன்னறிவிப்புகளாகும். இங்கு அல்லாஹ்வின் ரஹ்மத் பற்றி கூறப்பட்டுள்ளது. இந்தக் கருணை முன்பு இருந்ததைப் போன்றே இன்றும் பரவியுள்ளது. நிபந்தனை என்னவென்றால் அல்லாஹ் கூறியுள்ள கட்டளைகளை மனிதன் நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ் தனது அளவற்ற அருளைப் பற்றி அனைத்தையும் சூழ்ந்துள்ளது என்று கூறுகிறான். அதோடு மனிதனுக்கு அவன் பிறந்த நோக்கத்தை கவனமூட்டி விட்டான். ஆம்! எனது கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளதுதான். ஆனால், உங்கள் மீதும் சில பொறுப்புகள் உள்ளன. அதையும் நிறைவேற்றுங்கள். ஷய்த்தானைப் பின்பற்றாதீர்கள். தக்வாவைப் பேணுங்கள். என்னை மட்டும் வணங்குங்கள். எல்லா தொடர்புடைகளையும் விட என்னை அதிகமாக நேசியுங்கள். அல்லாஹ்வின் உரிமையையும் படைப்பினங்களின் உரிமையையும் பேணுவதற்கு பொருள் தியாகம் செய்யுங்கள். எனது வசனங்களின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்.

அல்லாஹ்வின் நபிமார்கள் இவ்வுலகில் வருவதும் இறைவனின் அடையாளங்களுள் ஒன்றாகும். ஏனென்றால் அவர்களின் வருகையால் இறைவனின் அடையாளங்கள் தொடர்ந்து வெளிப்பட ஆரம்பித்து விடுகிறது.

இக்காலகட்டத்திலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசர் ஆவார்கள். அவர்களின் வருகையோடு அல்லாஹ்வின் அடையாளங்கள் வெளிப்படுவது தொடர்கிறது. இந்த அடையாளம் நமக்கு சூரிய சந்திர கிரகணம் வடிவில் தென்பட்ட நில நடுக்கத்தின் வடிவிலும் வெளிப்பட்டது. பிளேக் நோயின் வடிவிலும் அது வெளிப்பட்டு விட்டது.

பிறகு இக்காலகட்டத்திற்கு சிறப்பாக பல அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளது. இந்த அடையாளங்களை அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பியதன் பிறகு நமக்கு வெளிப்படுத்துகிறான். நிலநடுக்கம் வருகிறது. நோய்கள் அதிகமாகி விட்டது. இதற்கு முன்பும் இவையெல்லாம் இருக்கத்தான் செய்தது. ஆனால் இந்த அளவு கடுமையாக எப்போதும் இருந்ததில்லை என்று இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இதெல்லாம் எனக்கு உறுதுணையாக வெளிப்படும் என்று வாதம் செய்பவர் செய்த பிறகு இது அல்லாஹ்வின் அடையாளங்கள் ஆகி விடுகின்றன.

எனவே அல்லாஹ் கூறுகிறான். எனது அடையாளங்களைப் பாருங்கள். அதை ஏற்றுக் கொள்ளுங்கள். என்னிடம் அனுப்பப்பட்டவரை ஏளனம் செய்யாதீர்கள். எனது கருணைக்கு எல்லையே இல்லை. அது விரிவடைந்து கொண்டே செல்லும். அல்லாஹ் மாலிக் ஆவான். அவன், தான் விரும்புபவருக்கு தண்டனை வழங்குகிறான். தான் விரும்புபவரை மன்னித்து விடுகின்றான். ஆனால் அல்லாஹ் தனது கருணையை எல்லாவற்றின் மீதும் சூழ்ந்து கொள்ளச் செய்துள்ளான். எனவே அடியார் அல்லாஹ்வின் மன்னிப்பை எதிர்பார்த்தவாறு அவனது கட்டளையின்படி வழி நடக்க முயற்சி செய்ய வேண்டும்.

ஒரு மூஃமின் குறிப்பாக இவ்வாறு வழிநடக்க வேண்டும். அல்லாஹ் தன் மீது கடமையாக்கி உள்ளதை விட்டு விட்டு இறைவனின் கருணை மிக பரந்தது. எனவே, நான் மன்னிக்கப்படுவேன் என்று கூறி மனம் விரும்பியதையெல்லாம் செய்து கொண்டிருப்பது முட்டாள்களின் வேலையாகும். இது அல்லாஹ்வின் பண்புகளைப் புரிந்து கொள்ளாததாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதற்கு இவ்வாறு விளக்கம் கொடுக்கின்றார்கள்:**

அல்லாஹ்வின் கருணை பொதுவானதும் மிக பரந்ததும் ஆகும். அவனது கோபம் அதாவது நீதி என்ற பண்பு சில சிறப்பான விஷயங்களுக்குப் பிறகுதான் பிறக்கிறது என்று இவ்வசனத்திலிருந்து தெரிகிறது. அதாவது இந்த பண்ப இறை நியதியை, சட்டத்தை மீறிய பிறகு தனது உரிமையை நிலைநாட்டுகிறது.

இறைவனின் கருணை ஐயமின்றி மிகவும் விரிவானதுதான். ஆனால் அவனுடைய நீதியின் பண்பின் கீழ் தீர்மானம் எடுக்கிறது. மனிதன் இறை நியதியை மீறுகின்ற போது இறைவனின் நீதி என்ற பண்பு தனது உரிமையை நிலைநாட்டுகிறது.

இறைவன் ஒரு விதியை வகுத்திருக்கின்றான். அதன் அடிப்படையில் எல்லையை மீறுகின்றபோது தண்டனையை தீர்மானித்து விடுகிறான். எனவே, பாவம் செய்பவர்களை எனது கருணை சூழ்ந்துள்ளது என்று கூறவில்லை. மாறாக, இறையச்சத்தின்படி செயலாற்றுபவர்களும், ஸக்காத் கொடுப்பவர்களும், இறை அடையாளங்களின் மீது நம்பிக்கை கொள்பவர்கள் தொடர்பாக கூறுகிறான். இவர்களின் மீது எனது கருணை சூழ்ந்துள்ளது. எனவே ஒரு மூஃமின் இறைவனின் இந்த கருணையைப் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். பிறகு அல்லாஹ்வின் விரிவான கருணையை நம்ப வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 08.05.2009

Translated by : **Maulavi S. ABDUL QADIR**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**